**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 19.06.2026**
**OS. No. 191/2016**
**வழக்கு சாட்சி DW.1–சிவகாமி, க/பெ. மணி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என் மீதும், என் மகன் மீதும், அரசு அதிகாரிகள் மீதும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எங்கள் வீட்டு குடோனிற்கு லாரிகள் வந்து செல்லக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள வீடானது நாங்கள் கிரையம் பெற்றதா என்றால் ஆமாம். மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதற்கு அனுமதி பெற்று, தடத்திற்கும் அனுமதி பெற்று வாங்கிய சொத்து என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் நிறுவனமானது பொதுமக்களின் அத்தியாவசிய தேவைக்காக அமைக்கப்பெற்ற நிறுவனம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு அந்த நிறுவனமானது தாவா கட்டிடத்தில் இயங்கவில்லை என்றால் சரிதான்.

2) வாதி அவரது வீட்டின் கீழ் தளத்தை பேப்ரிகேஷன் வேலை செய்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளார் என்றும், மேல்தளத்தில் அவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் நிறைய தொழில் நிறுவனங்கள் உள்ளது என்றும், தாவா 20 அடி ரோட்டில் தான் தொழில் நிறுவனங்கள் தொடர்பான அனைத்து கனரக வாகனங்களும் சென்று வருகிறது என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் எங்களுடைய வீட்டில் வாடகைக்கு உள்ளதால், எங்களுக்கு நல்ல வாடகை வருவதால் பொறாமை குணம் கொண்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.